101
(public libraries) Act 1954
OFFICE ... 11 OCT 1956

பிர்மமே சத்தியம்.

இல்லறம் நடத்துவது எப்படி?

ஒவ்வொரு குடும்பப் பெண்களும், ஆண்களும் அவசியம் படித்து பயனடைய வேண்டிய அருமையான நூல்.

101
4-56

★

தமிழ் நாட்டுத் தத்துவ ஞானி திருவாரூர்

ஸ்ரீகுரு கிணகர் சுவாமிகள்

அருளியது.

★

திருவாரூர்
பிர்ம வித்தியா பீடம்.
1956-வது ஆண்டின் முதலாவது வெளியீடு.

திருவாரூர்
நமச்சிவாயம் அச்சகத்தில் 1956-ல்
பதிப்பிக்கப்பெற்றது.

R34
N56.
183266

இந்நூலை படித்து இதன்படி வாழ்க்கை நிகழ்த்தும்
இளம் சதிபதிகளுக்கு இவனைப் போன்ற
ஆண் மகவு பிறக்கவேண்டுமாய்
ஆசீர்வதிக்கின்றேம்.

★ பரம அம்சன். ★

ஸ்ரீ குருகிணகர் சுவாமிகளின் பேரன்.

முன்னுரை.

தமிழ்நாட்டு தத்துவ ஞானி (திருவாரூர்) ஸ்ரீ குரு கிணகர் சுவாமிகளின் திருக்குமாரி ஸ்ரீமதி மங்கையற்கரசி அம்மையாருக்கும், திருமக்கோட்டை திரு கோ. பொன்னுச்சாமி தெய்வீகர் அவர்களுக்கும் கர வருடம் ஐப்பசி மாதம் 5-ம் நாள் (22—10—51) திங்கட்கிழமை சுவாமிகளின் சிஷ்யர்களும், மெய் யன்பர்களும், மற்ற உற்றார் உறவின் முறையார்களும் புடைசூழ சிறப்பாக திருமணம் நிகழ்ந்தது.

விவாகமான தனது மகள் மங்கையற்கரசி அம்மையாருக்கு இல்லறம் நடத்துவது எப்படி? என்பதை விளக்கி சுவாமிகளால் எழுதப்பட்ட நிருபமே இந்த புத்தகமாகும். சுவாமிகள் எழுதிய இந்த கடிதத்தில் மனைவி என்பவள் யார்? புருஷனால் சூட்டப்பட்ட தாலியை கழுத்தில் மாட்டிக்கொண்டு புருஷனுடன் வாழ்க்கை நடத்துவதால் மாத்திரம் ஒரு பெண் மனைவியாகிவிட முடியுமா? தாலியின் தத்துவமென்ன? எப்படிப்பட்டவள் மனைவியாவாள்? ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண்டு பெண்ணோடு வாழ்க்கை நடத்துவதால் மாத்திரம் ஒருவன் புருஷனாகிவிட முடியுமா? எப்படி பட்டவன் புருஷனாவான்? பெண்ணென்றால் யார்? சேலை கட்டிய மாதர்களுக்கெல்லாம் பெண்களென்று பெயரா? பெண்ணென்ற வார்த்தையின் கருத்தென்ன? பத்தினி என்பதின் தத்துவமென்ன? சம்சாரம் என்பதன் தாற்பர்யம் யாது? என்பனபோன்ற இல்லற வாழ்க்கையின் உயரிய லட்சியங்களை பசுமரத்தாணிபோல் மனதில் பதியும் தன்மையில் சுருக்கமாக எளிய நடையில் விளக்கம் செய்யப் பெற்றிருக்கிறது.

மகளுக்கு சுவாமிகளால் எழுதப்பட்ட இந்த கடிதமானது பொது வாக இல்லற வாழ்க்கை நடத்தும், இல்லற வாழ்க்கை நடத்தப்போகும் எல்லா ஸ்திரீ புருஷர்களுக்குமே இன்றியமையாத இல்லற ஞானக் களஞ்சியமாக இருக்கிறதே இதை எப்படியாவது புத்தக உருவில் வெளி யாக்கிவிட வேண்டுமென்ற நன்னோக்கங்கொண்டு சுவாமிகளிடம் இந்த கடிதத்தை புத்தக ரூபமாக்கவேண்டுமென்று உத்தரவுபெற்று திருவாரூர் பிரம வித்யாபீட சார்பில் வெளியாக்கியுள்ளமையால் இல்லற வாழ்க்கை யின் லட்சியங்களை உணர்ந்து தெளிந்து திருந்திய முறையில் இல்லற வாழ்க்கை நடத்த ஊக்கங்கொண்ட அன்பர்களும தாய்மார்களும் படித்து பயனடைவார்களாக.

இங்ஙனம்

சாது ராஜப்பா,

சுவாமிகளின் சிஷ்யர், உதயமார்த்தாண்டபுரம்.

ஸ்ரீ குரு கிணகர் சுவாமிகளின்

வைர வார்த்தைகள் சில.

1. மனிதனுகப் பிறப்பதே பெரிது. ஆனல், மனித அறிவோடு வாழ்வது மகா அறிது.
2. நீ யார்? நீ யாரென்பதை நிதானித்துப் பார் உன் உண்மை மனித நிலையை உணர்வாய்
3. வீரனுகயிரு அல்லது விவேக மிகுந்த சாதுவாகயிரு. கோபமிருக்கட்டும் ஆனுல், கோபியாக இராதே.
4. கல்வி அறிவைவிட அனுபவ அறிவே மனிதனை ரட்சிக்கும் கடவுளாகும்.
5. சந்தோஷமென்பது மனதில் தோன்றித் தோன்றி மறையும் புரட்சிகரமான ஒரு கிளர்ச்சியேயாகும்.
6. கற்பில்லாத பெண்களுக்கு அழகிருந்தும் பயனில் லாததுபோல – அனுபவமில்லாத படிப்பாளர்களுக்கு ஞானமிருந்தும் பயனில்லை.
7. மனிதன் பணத்துடன் சேர்ந்து வாழப் பிரியப்படுகின் ருன். ஆனுல், நல்ல குணத்துடன் சேர்ந்து வாழப் பிரியப்படுகிறதில்லை.
8. மதனின் பெண்ணோடு சேர்ந்து வாழத் தெரிந்து கொண்டான். ஆனுல், தன்னோடு சேர்ந்து வாழத் தெரியவில்லை.

ஒரு பனிதன் செய்யும் சிறிய தொழிலைக்கொண்டு அவனை இகழ்வாக எண்ணுகிறவன் முதல் தரமான முட்டாளேயாகும். எனவே ஒருவண் செய்யும் சிறு தொழிலைக்கொண்டு அவனை மதிப்பிடாதே. பெரிய தொழில் செய்கின்ற முதலாளிகளிலும் ஏழைகளின் உழைப்பை உறிஞ்சும் இரக்கமற்ற ஈனச்செயலுடைய வனுமிருக்கிறுன். ஒருவன் செய்வது சிறு தொழிலேயானுலும் அவன் அத்தொழிலை நேர்மையாக செய்கின்ருனு என்பதை மாத்திரம் தெரிந்துகொள்.

சுவாமி விவேகானந்தா.

பிர்மமே சத்யம்.

இல்லறம் நடத்துவது எப்படி?

அன்பின் ஆழத்தே மிளிரும் பேரன்புமிக்க அருமை மகளான மாண்புபெரும் மங்கயற்கரசியே! எனது எதார்த்த ஆசி உன்னையும், உன் பதியையும் அனுக்கிரகிக்குமாக!

1—2—52-ல் நீ எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்று நானும், உன் தாயாரும், தமையன் நடராஜனும், தங்கை தேவிகாராணியும் பார்த்து மட்டற்ற மகிழ்சியடைந்தோம். உன் இளைய சகோதரனை குழந்தை பிர்மஞானம், நடராஜன், தேவிகாராணி முதலிய யாவரும் அமைதியாகவும், சுகமாகவும் இருக்கிறார்கள். நிற்க இளமையில் இல்லற வாழ்க்கையேற்ற உனக்கு இல்லறம் நடத்துவது எப்படி? மனைவி என்பவள் யார்? பத்தினியென்பதின் தத்துவமென்ன? சம்சாரம் என்பது யாது? எப்படிப்பட்டவன் புருஷனாவான் என்பனபோன்ற பிரச்சனைகளை விளக்கி இந்த கடித மூலம் எழுதியுள்ளேன். பதி சகிதமாக படித்து பயனடைவாயாக.

அன்பான மகளே! ஒரு பெண்ணுக்கு யோக்கியமான கணவன் வாய்ப்பதும், ஒரு ஆணுக்கு புத்திசாலித்தனமான மனைவி வாய்ப்பதும் பெரியதொரு அதிஷ்டமேயாகும்.

பெரும்பாலும் புருஷன் நல்ல குணமுள்ளவனாயிருந்தால், மனைவி மாறுபட்ட குணமுள்ளவளாகயிருக்கிறாள். கணவன் கெட்ட குணம் உள்ளவனாகயிருந்தால் மனைவி நல்ல குணமுள்ளவளாக இருக்கிறாள். ஏதோ ஆயிரத்தொருவராக சதிபதிகள் இருவருமே நல்லகுணம் உடையவர்களாகயிருக்கிறார்கள். எனவே மகளே! நீ ஒரு நல்ல குணவதியாகயிருந்தாலும் புதிதாக விவாகமான உனக்கு இல்லற வாழ்க்கையைப் பற்றிய எந்த விபரமும்

தெரியாதல்லவா? ஆனதால் இக்கடிதத்தில் இல்லற தர்மத்தை விளக்கி எழுதியுள்ளேன். பலமுறை பார்வையிடு அவைகளை அனுசரித்து வாழ்க்கையை நடத்த ஆர்வங்கொள்.

மனைவி.

வருவாய்க்கு தக்கபடி கணவன் மனம் கோணுது, அன்பு குறையாது, குறிப்பறிந்து வாழ்க்கை நடத்த தகுந்த நல்லொழுக்கம் உடையவளாக மனைவி இருந்தாளேயானுல், அன்ருடம் கூலி வேலை செய்து படியரிசி வாங்கி பானையிலிட்டு காலந்தள்ளுகின்ற ஏழையாக ஒருவன் இருந்தாலும், அவன் வாழ்க்கை சர்வ சம்பத்தோடு கூடிய அமைதியான, ஆனந்தமான வாழ்க்கையாக இருக்கும். அவன் வாழ்க்கையில் அனுபவிக்கும் அமைதி பெரிய பணக்காரனும் அனுபவிக்க முடியாததாகயிருக்கும்.

மனைவியானவள் வாழ்க்கைக்குத் தகுந்த நல்லொழுக்கமில்லாதவளாக, அதாவது நற்குணம், நற்செய்கை இல்லாதவளாக, வாய்ப் பட்டியாய், முன்கோபியாய், பிற புருஷர்களும், ஸ்திரீகளும் தன்னை உற்றுப் பார்க்க வேண்டுமென்பதற்காக விதவிதமான ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொள்ள ஆசையுடைய ஆடம்பரக்காரியாய், அகந்தையுடையவளாய், குடும்பத்திலுள்ளவர்களை அனுசரித்து நடக்க ஆற்றலில்லாதவளாய், இருந்தாளேயானுல் கணவன் எவ்வளவு பெரிய பணக்காரனுய் இருந்தாலும் சரி, பெரிய பதவியில் இருப்பவனுயினும் சரி, சர்வ சுகங்களையும் அனுபவிப்பதற்குறிய சம்பத்துடையவனுக இருந்தாலும் சரி, அவன் வாழ்க்கையில் அமைதி கிடைப்பதேயில்லை. அமைதிக்குபதில் அவன் அவதியையே அனுபவிக்கிருன். எல்லாமிருந்தும் இல்லாதவனுகவே இருக்கிருன். இந்நிலையில் உனக்குள்ள நல்ல குணங்களுக்கு தக்கவாறு நற்குணங்களுடன் கூடிய கண்ணியமிக்க கணவன் வாய்த்தது உன் அதிஷ்டமே! இதைவிட கணவனிடம் ஒருமித்த மனமுடையவளாகவும், குணவதியாகவும் உள்ள உன்னை மனைவியாகக்கொண்ட உன் கணவனின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்.

பெண்ணென்றால் அதன் கருத்தென்ன?

பெண்ணென்றால் அடுப்பூதி ஆகாரம் சமைப்பதும், பாத்திரம் கழுவுவதும் மற்ற வீட்டு வேலைகளை செய்வதும், குழந்தைகளைப் பெறுவதுமாகயிருக்கும் சேலை கட்டிய உருவத்தையே மனிதன் பெண்ணென்று நினைத்துக்கொண்டிருக்கிறான். பாத்திரம் துலக்குவதும், அடுப்பூதி ஆகாரம் சமைப்பதும், மற்ற வீட்டுவேலை செய்வதும், குழந்தைகளைப் பெறுவதுமாகயிருக்கும் சேலை கட்டிய உருவத்திற்கு பெண்ணென்று பெயரில்லை; பெண்ணென்ற சொல் பேண் யென்ற வார்த்தையிலிருந்து மருவி வந்தது; தந்தை தாய் பேண் யென்று ஔவை பிராட்டியார்கூட சொல்லுகின்றார். பேண் யென்ற வார்த்தைக்கு காப்பாற்று என்று பொருளாகும். பேணுதல் யென்றால் காப்பாற்றுதல், ஆதரித்தல் என்று பொருளாகும். காப்பாற்றுதல் என்றால் என்ன?

தன்னை விவாகம் செய்துகொண்ட கணவனை கருணையுள்ளம் படைத்தவளாய் காப்பாற்றுபவளென்று பொருளாகும். தாயைப் போன்ற கருணையுள்ளமென்றாலென்ன? சம்பாதித்தாலும், சம்பாதிக்காவிட்டாலும், யோக்கியனாகயிருந்தாலும், அயோக்கியனாகயிருந்தாலும், குருடனாக யிருந்தாலும், செவிடனாகயிருந்தாலும், தாயானவள் பெற்ற பிள்ளையினிடத்தில் வைத்திருக்கும் பேரன்பு போல், கணவனிடத்தில் பேரன்புடைய உள்ளம் படைத்த பெருந்தகையாக உள்ளவள் எவளோ அவளுக்குத்தான் அவள் உள்ளத்திற்குத்தான் பெண்ணென்று பெயர், பெண்ணென்று பொருள். இதற்குத்தான் தாய்க்குப்பின் தாரம் என்று பழமொழி கூறுகிறது.

மனைவிக்குரிய மாண்பு இவ்வாறிருக்க கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவியானவள் தான் அணிந்திருக்கும் தாலியின் தத்துவமென்ன? எதற்காக தாலியைக்கழுத்தில் அணிந்திருக்கிறோம் என்ற விபரம் எதுவும் தெரியாமல் சாதம் சமைப்பதற்காகவும், சிற்றின்பம் அனுபவிப்பதற்காகவும், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்காகவும், வீட்டு வேலைசெய்வதற்காகவும், உண்டுகளித்து உறங்குவ

தற்காகவுமே நாம் கணவனுக்கு மனைவியாகயிருக்கிறோம்; இதற்
காகத்தான் மணவரையில் பலபேர் முன்னிலையில் அமர்த்தி மேள
வாத்தியம் முழங்க கணவன் நம் கழுத்தில் தாலியை கட்டியிருக்கின்
றான் என நினைத்து கபோதித்தனமாக குடும்பம் நடத்தும் கருத்தற்ற
வளாக பெண் இருக்கின்றாள். மேலும், கொலு பொம்மைக்கு
வேஷம் போட்டாற்போல் சினிமா நடிகைகளைப்போல் உடலை
அலங்காரம் செய்துகொள்வதும், படித்திருந்தால் புத்தியை மழுங்கச்
செய்யும் கருத்தற்ற கதைகளையும், காம உணர்ச்சியை ஊட்டும்
காவியங்களைப் படிப்பதும் கண்டாகண்ட சினிமாப் படங்களையும்,
நாதாரித்தனமான நாடகங்களைப் பார்ப்பதும், தன் இஷ்டப்படி
கணவன் தன்னோடு ஒற்றிருந்தால் முடையார செலவு செய்ய
நன்றாக பணம் சம்பாதித்துக் கொடுத்தால் அதற்காக கணவனிடம்
அன்பு பாராட்டுவதுமான அபிநய குணமுடையவளாய் மனைவி
யிருக்கிறாள்.

மனைவிக்குரிய பெருங் குணங்களோடு கணவனிடமிருந்து
குடும்பத்தார்களிடமிருந்து குடும்பம் நடத்த வழி முறை தெரியாத
பெண் அழகுடையவளாக, படித்தவளாக, ஆடம்பரமுடையவளாக
யிருந்து என்ன பயன்? வாசனையில்லாத புஷ்பம் அழகாயிருந்து
என்ன பயன்? பார்வைக்கு அழகாயிருக்கும் பாலில்லாத பசுவை
பசுவிற்குடையவன் விரும்புவதில்லை. சூடுபோட்ட விகாரமான
எருமை மாடாகயிருந்தாலும், நிறைய பால் கொடுக்கக்கூடியதா
யிருந்தால் மாட்டிற்குடையவன் அந்த எருமை மாட்டை பிரியத்
தோடு விசேஷமாக போஷிப்பான். இதேபோல் பார்வைக்கு
அழகற்றவளாக, படிக்கத் தெரியாதவளாக ஒரு பெண் இருந்தா
லும் அவள் நல்ல குணவதியாக இருப்பாளேயானால் கணவனும்
குடும்பத்தார்களும், ஏனையோர்களும் அவளை குடும்ப ஜோதியென்று
கொண்டாடுவார்கள். நல்ல குணமில்லாது பார்வைக்கு மாத்திரம்
அழகுடையவளாக, அலங்கார முடையவளாக படித்தவளாக
இருந்தாளேயானால் அவள் அழகும், படிப்பும், அலங்காரமும்
அர்த்தமற்றதேயாகும். எனவே, தாலியை கழுத்தில் அணிந்து

கொண்டதினுல் மாத்திரம் ஒரு பெண் கணவனுக்கு மனைவியாகிவிட முடியாது, கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவியானவள் தான் அணித்திருக்கும் தாலியின் தத்துவம் தெரியாமல் இருப்பாளே யானுல் அவள் மனைவியல்ல. அவள் பெயரளவில் மனைவியாயுள்ள பிரஜா உற்பத்தி செய்யும் வெறும் ஸ்திரீ உருவமேயாகும். எனவே, மனைவியென்ருல் யார்? எப்படிப்பட்டவள் மனைவியாக முடியும் என்ற உண்மையை தெரிந்துகொள்ளவேண்டும். அப்பொழுது தான் விவாகமான ஒரு பெண் மனைவியின் ஸ்தானத்தை அடைய முடியும்.

மனைவியென்ருல் யார் ?

மனைவியென்ருல் குடும்பத் தலைவியென்று பொருளாகும். குடும்பத் தலைவியென்பதை குறிப்பதற்காகத்தான் மனைவிக்கு நாயகி யென்ற பெயரும் வழங்கப்படுகிறது. மனைவியென்பவள் குடும்பத்தை தலைமை தாங்கி நடத்துவதற்குரிய ஆற்றல் மிக்கவ ளாகயிருக்கவேண்டும். கணவன் தலைமையின் கீழ் குடும்பத்தை தலைமை தாங்கி நடத்துவதற்குரிய தகுதி வாய்ந்தவள்யென்பதை நிரூபித்துக்காட்டும் பட்டயந்தான் மனைவி கழுத்தில் அணிந்திருக்கும் மாங்கல்யத்தின் அறிகுறி. கணவனுக்கு வாழ்க்கைபட்ட பெண்ணு னவள் குடும்பத்திற்கு தலைவியே யென்பதை நிரூபிப்பதற்கான அடையாளச் சின்னங்கள் மணப்பந்தலிலேயே மணப்பெண்ணிற்கு வழங்கப்படுகிறது.

மாமி நாத்திப்பட்டம் கட்டுகிருர்களே ! அதன் மர்மமென்ன ?

மருமகளென்ற ஒரு பெண் குடும்பத்திற்கு வாரததற்கு முன்பு குடும்பத்தை மாமியோ, நாத்தியோ தலைமைதாங்கி நடத்தி வருகிருர்கள். குடும்பத்திற்குரியவனுக்கு பெண்பார்த்து நிச்சயித்து மணவறையில் தாலிகட்டி முடிந்தவுடன் பவுன் காசிலோ அல்லது நூலில் புஷ்பத்தை கட்டியோ மாமிபட்டம் நாத்திபட்டமென்று மணப்பெண்ணின் நெற்றியில் கட்டுகிருர்களே அதன் தாற்பரிய மென்ன ! மாமியானவள் தன் அதிகாரத்தின் கீழ் நடத்திவந்த

தனது குடும்ப நிர்வாகத்தை மருமகளான மணப்பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டேன். இன்றிருந்து இக்குடும்பப் பொறுப்பு அவ்வளவும் மருமகளுக்குரியதென்று கல்யாணப் பந்தலிலுள்ள அனைவரும் அறிய குடும்ப அதிகாரத்தை மருமகளிடம் ஒப்படைக்கும் அதிகார மாற்றந்தான் மாமியார் மருமகளுக்கு பட்டங்கட்டுவதின் மர்மம். இதேபோல் நாத்தியும் குடும்பத்தில் தனக்குள்ள பொறுப்பையும் அதிகாரத்தையும் சகோதரன் மனைவிக்கு கொடுத்துவிட்டேன் என்பதற்கறிகுறியாக நாத்திப்பட்டம் கட்டுகிறார்கள்.

மாமி நாத்திப்பட்டம் கட்டுவதின் மர்மம் இவ்வாறிருக்க மாமிப்பட்டங்கட்டிய மாமிக்கும், நாத்திப்பட்டங்கட்டிய நாத்திக்கும், தாங்கள் பட்டங்கட்டியதின் விபரம் புரிவதில்லை. குடும்பத்தலைவியென்பதைக் குறிக்கும் அடையாளச் சின்னமான பட்டங்கட்டிய பவுன் காசை தாலியில் கோர்த்துக் கழுத்தில் போட்டுக்கொண்டிருக்கும் நாட்டுப் பெண்ணிற்கும் பட்டம்கட்டியதின் விபரம் புரிவதில்லை. ஏனையோர்களுக்கும் அனேகமாக இதன் உண்மை விளங்குவதில்லை.

மருமகளுக்குப் பட்டங்கட்டிய மாமியானவள் பட்டங்கட்டிய உண்மை தனக்குத் தெரியாததினாலேயே குடும்பப் பொறுப்பை குடும்ப அதிகாரத்தை மருமகளிடம் விட்டுக்கொடுக்க மனமில்லாமல் மாமியாகிய நான் குடும்பத்தில் இருக்கிற வரையில் மருமகளுக்கு என்ன அதிகாரமிருக்கிறது யென்று மமதை பாராட்டுகிறாள்.

மாமி மமதைக்கு ஒரு உதாரணம்.

ஒரு மாமியானவள் மருமகளுக்கு எந்த சலுகையும் கொடுக்காமல் தனது அதிகாரத்தில் கெடுபிடியாக குடும்பம் நடத்தி வந்தாள். ஒருநாள் அந்த வீட்டின் முன் ஒரு பிச்சைக்காரன் வந்து அம்மா தாயே, கொஞ்சம் சோறு கொடுங்களேன என்று கேட்டான். உடனே அந்த வீட்டு நாட்டுப்பெண் சாப்பாடு ஆகிவிட்டது போ!

என்று பிச்சைக்காரனுக்கு சொல்லி அனுப்பிவிட்டாள். இதைக் கவனித்துக்கொண்டு கொல்லைப் பக்கம் நின்ற மாமியார் வேகமாக வந்து மருமகளான நாட்டுப் பெண்ணைப் பார்த்து அடியே உனக்கு அவ்வளவு அதிகாரமா வந்துவிட்டது எப்படியடி மாமியார் நான் இருக்க என்னைக் கேட்காமல் பிச்சைக்காரனுக்கு பிச்சையில்லை யென்று சொன்னாய்? போடி அந்த பிச்சைக்காரனைப் போய் இங்கே அழைத்துவாடி யென்று கோபக் குரலோடு கூறினாள். இதைக்கேட்ட நாட்டுப் பெண் நாலாவது வீட்டில் பிச்சைக்கேட்டு நின்ற அந்த பிச்சைக்காரனை அழைத்துவந்தாள். பிச்சைக்காரன் முன்னிலையில் மருமகளைப் பார்த்து ஏண்டி உனக்கு அவ்வளவு தைரியமா; மாமியார் நானிருக்க எப்படியடி நீ பிச்சைக்காரனுக்கு பிச்சையில்லையென்று சொன்னாயென்று கண்டபடி மருமகளைப் பேசிவிட்டு பிச்சைக்காரனை சமீபத்தில் கூப்பிட்டு ஏய் பிச்சைக்காரா! பிச்சையில்லையென்று அவள் என்ன சொல்வது பிச்சையில்லையென்று நான் சொல்லுகின்றேன் நீ போ என்று பிச்சைக்காரனை அனுப்பிவிட்டாள். இப்படிப் பிச்சைக்காரனுக்கு பிச்சையில்லையென்று சொல்வதற்குகூட சுதந்திரமில்லாது பிச்சை யில்லையென்பதையும் மாமியாரை கேட்காமல் சொல்லக்கூடாது யென்ற அவ்வளவு அதிகார மமதை பிடித்த அநாகரீக மாமியார்கள் அனேகம் பேரிருக்கிறார்கள்.

பெரும்பாலான குடும்பங்களில் வீட்டுக்கு மருமகளாக வந்த நாட்டுப் பெண்ணை வீட்டு வேலைக்காரியைப்போல், அடிமை யைப்போல் பாவித்து இழிவாகப் பேசிச் சச்சரவை உண்டாக்கி அனேக மாமி நாத்திமார்கள் குடும்பத்தை குட்டிச்சுவராக்கிவிடு கிறார்கள். மாமி நாத்திகளின் யோக்கியதைத்தான் இப்படியிருக் கிறதேயென்று மருமகப் பெண்கள் யோக்கியதைப் பார்த்தாலோ மகா வெட்க கேடாகயிருக்கிறது. குடும்பப் பொறுப்பை, குடும்ப அதிகாரத்தை ஏற்றுக்கொண்டதற் கறிகுறியான மாமி, நாத்தி, பட்டங் கட்டிய பவுன் காசை தாலியுடன் இணைத்து கழுத்தில் போட்டுக்கெண்டிருக்கும் குடும்பப் பெண்கள் குடும்பத் தலைவி

யென்ற முறையில் பொருமையுடையவர்களாய் எல்லாவற்றையும் ஆமோதித்து குடும்பப் பொறுப்பை ஏற்று குடும்பம் செய்ய யோக்கியதையில்லாமல் குடும்பம் செய்யப் பழகிக் கொடுக்கும் வகையில் மாமி ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் மாமி சொல்வது சரியா தப்பாயென்று நிதானித்துப்பாராமல் மாமியை எதிர்த்து ஒன்பது வார்த்தை பேசுபவர்களாகவும், நாத்தி நாலு வார்த்தை சொல்லுவதற்குள் எதிர்த்து நாற்பது வார்த்தை பேசுபவர்களாகவுமுள்ள விவேகமில்லாத விருப்புடைய காட்டுப் பெண்களாகவே நாட்டுப் பெண்களிருக்கிறார்கள். மேலும் விவாகமாகி வெகு வருஷங்களான பிள்ளைக்குட்டிகளைப் பெற்ற பெரிய மனுஷிகளும் கூட குடும்பத் தலைவியென்பதற்கான பொருமையில்லாமல் கணவன் முதல் மாமி, மாமனார், நாத்தி வரை குடும்பத்திலுள்ள அனைவர்களையும் அனுசரித்து குடும்பம் நடத்த வழிதெரியாத குணங்கெட்ட முன்கோபிகளாகவேயிருக்கிறார்கள்.

மருமகள் என்பவள் யார்?

தாய் தந்தையர்கள் ஏதாவது தவறுதல் செய்துவிட்டாலும், தவறுதலான வார்த்தைகள் சொல்லிவிட்டாலும், அதை மகளானவள் பொருட்படுத்தாமல் எப்படி தாய் தந்தையர்களிடம் அன்பு குறையாதவளாக யிருக்கின்றாளோ அப்படியே மாமி, மாமனார் ஏதாவது தவறுதல் செய்துவிட்டாலும், தவறுதலான வார்த்தைகள் சொல்லிவிட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் சகித்து மாமி, மாமனார்களை தாய் தந்தையர்களைப்போல் பாவித்து நடத்தும் புத்திசாலியாக உள்ள பெண் எவளோ அவளே மருமகளாகும். மருமகளுக்குள்ள இத்தகைய உத்தமகுணமில்லாமல் மாமி, மாமனார்களுக்கு அடங்கி நடக்காமல் மாமி, மானர்களை எதிரியைப்போன்று பாவித்து ஆதரிக்காதவள் பெயரளவில் மருமகளாகவுள்ள குடும்ப கோடரியேயாகும்.

மாமி மாமனார் என்பவர்கள் யார்?

மகள் ஏதாவது தவறுதலான வார்த்தை சொல்லிவிட்டாலும் சொல்லுகிறபடி நடக்காவிட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல்

தாய் தந்தையர்கள் எப்படி மகள் மீது அன்பு குறையாதவர்களாக இருக்கிறார்களோ அப்படியே மருமகளான நாட்டுப்பெண் தெரியாதனமாக ஏதாவது தவறுதல் செய்துவிட்டாலும், தவறுதலான வார்த்தைகள் சொல்லிவிட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் குடும்பம் நடத்துவதற்குறிய பழக்கவழக்கங்களை இதமாக போதித்து மருமகளை மகளைப்போன்று பாவித்து அன்பு பாராட்டுகின்ற அறிவுடையவர்களே மாமி, மாமனார்களாகும். மாமி, மாமனார்களுக்குள்ள இத்தகைய உத்தம குணமில்லாமல் மருமகளை எதிரியைப்போன்று, அடிமையைப்போன்று பாவித்து அலட்சியமாக நடத்துகின்றவர்கள் பெயரளவில் மாமி மாமனாராகவுள்ள எமதூதர்களேயாகும். எனவே மாமி நாத்திப்பட்டம் கட்டுவதின் உண்மையைப்புரிந்து தாலியின் தத்துவத்தை தெரிந்து குடும்பத்தலைவியென்பதற்குறிய சகிப்புத்தன்மையின் அடிப்படையில் குடும்பப்பொறுப்பேற்று புருஷன் வருவாய்க்குத் தக்கபடி புருஷன் மனங்கோணாது புருஷன் குணமறிந்து, குறிப்பறிந்து மாமி மாமனார் முதல் குடும்பத்திலுள்ள அனைவருடைய அபிமானத்தையும் பெற்று அக்கம் பக்கங்களிலுள்ள எல்லோராலும் நன்கு மதிக்க புருஷனோடு வாழ்விலும், தாழ்விலும் ஒற்று வாழ்கின்ற உத்தம ஸ்திரீ எவளோ அவளையே மனைவியென்று சொல்வது.

அன்பான மகளே! பெரும்பாலான குடும்ப ஸ்திரீகள் தாங்கள் அணிந்திருக்கும் தாலியின் திவ்ய தத்துவம் தெரியாதவர்களாய் கணவனுடன் காதலியாக வாழபுத்தியின்றி காமுகர்ளாகவே வாழ்கின்றார்கள். மேலும் சில படித்த பெண்கள்கூட காதலென்றாலென்ன? என்ற விபரம் தெரிவதற்கான புத்தியில்லாமல் காமத்திற்கும் காதலுக்கும் உள்ள தரம் தெரியாமல் உழலுகிறார்கள். மேலும், காமமென்றாலென்ன? காதலென்றாலென்ன யென்ற விபரம்தெரியாத விவேகக்குருடர்களான கதாசிரியர்களினால் எழுதப்பட்ட கதைகளை வாங்கி பணப்பேய்களான பட முதலாளிகளினால் எடுக்கப்பட்ட நாதாரித்தனமான சினிமாப் படங்களையும், நாடகங்களையும் பார்த்து ரமித்து, கருத்தற்ற நூற்களையும், அனாச்சார வாரப்

பத்திரிகை, மாதாந்திர பத்திரிகைகளேயும் புரட்டி வீண் கதைகளேப் படித்து காமத்தையே காதலென்று கருதி சபல சித்தர்களாய் தடுமாறுகிருர்கள். மேலும் நாகரீகமென்ருலென்ன? யென்ற விபரம் அறியாது அனுகரீகத்தையே நாகரீகமென்று எண்ணி அனுபவிக்கும் இன்றைய உலக மக்களில் பெரும்பாலோர் காதலென்ற மேதை மொழியின் கருத்தை புரியாது; பெண்ணேக்கண்டு ஒரு ஆண் மோகிப்பதும், ஆணேக்கண்டு ஒரு பெண் மோகிப்பதும் தான் காதலென்று கருதுகிருர்கள். ஒரு பெண்ணேக்கண்டு ஆண் மோகிப்பதும், ஆணேக்கண்டு ஒரு பெண் மோகிப்பதும் மிருகக்காமமேயாகும் பெண்ணேக்கண்டு மோகிக்கும் ஒருவன் காதலனுமல்ல. ஆணேக்கண்டு மோகிக்கும் ஒரு பெண் காதலியுமல்ல. இத்தகையவர் மிருகக் காமுகர்களேயாகும். எனவே, காதலியென்ருல் யார்? காமாந்தகாரியென்ருல் யார்? என்ற உண்மை தெரியவேண்டும், அப்பொழுதுதான் குடும்ப ஸ்திரீகள் கணவனுடன் காதலியாக வாழமுடியும்.

காதலி யென்பவள் யார்?

தன்னே விவாகம் செய்துகொண்ட கணவன் அழகுடையவனுயினும், அழகற்றவனுயினும், பணக்காரனுயினும், ஏழையாயினும் இவைகளேப் பொருட்படுத்தாமல் கணவன் விருப்பமே தனது விருப்பமென்று கணவன் விருப்புகிறபடி செயலாற்றி கணவன் திருப்தியே தனது திருப்தியென்று கணவன் திருப்தியடையும்படி நடந்துகொள்பவளாய் மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பெற்று கழுத்திலணிந்திருக்கும் மங்களகரமான மாங்கல்யமே ஆபரணங்களுக்கெல்லாம் சிறந்த ஆபரணமென்பதை உணர்ந்து ஆபரணங்களுக்கெல்லாம் ஆபரணமான மாங்கல்ய ஆபரணம் ஒன்று மாத்திரம் கடைசி வரை கழுத்தை அலங்கரித்துக்கொண்டிருந்தாலே போதுமென்று ஆபரண மோக மின்றியவளாய் வெளிப்பகட்டான ஆடைகளால் பிறர் பார்க்க அலங்காரம் செய்து கொள்வதில் வெட்கமுடையவளாய், புருஷன் பார்த்து ரமிப்பதற்காக, சந்தோஷப்படுவதற்காக வீட்டிலிருக்கும்போது தன்னே அழகு செய்துகொள்பவளாய் பயன்

கருதாது புருஷனிடம் பேரன்புடையவளாக வாழ்ந்து வாழ்க்கை மாறுதலினால் கணவன் வருவாயிழந்து வியாதி வயப்பட்டு அழகு குன்றி அங்கம் மெலிந்து விகார ரூபியாய் எதற்கும் லாயக்கற்றவனாகிவிட்டாலும் அதற்காக கணவனை அலட்சியம் செய்யாமல் கடமை தவறாமல் கற்பு வழுவாமல் பல வீடுகளில் பாத்திரம் துலக்கும் வேலை செய்தாவது கணவனை ஆதரித்து ஆவனச்செய்யும் உத்தம குணம் வாய்ந்த பதிவிரதை எவளோ அவளே காதலி யெனப்படும்.

காமாந்தகாரி என்பவள் யார்?

கணவன் தன் மனதிற்குப் பிடித்தமான ஆபரணம் வாங்கிக் கொடுப்பதற்காகவும், விதவிதமான (வாயில்-பட்டு) சேலை வாங்கிக் கொடுப்பதற்காகவும், அடிக்கடி சினிமா, நாடகங்களுக்கு அழைத்து போவதற்காகவும், தான் ஓதுகின்ற தலையணை மந்திரத்தைக் கேட்டு தலை அசைப்பதற்காவும், கணவனுடன் ஆசையாக, அன்பாக வாழ்கின்றவளும், கணவனானவன் கைப்பொருளற்று, வியாதிவயப் பட்டு அங்கம் மெலிந்து அழகு குன்றி விகார ரூபியாய் எதற்கும் லாயக்கற்றவனாய் விடும்போது கணவனிடம் முன்பிருந்த ஆசை, அன்பு அற்றவளாய் இவனை என் விவாகம் செய்துகொண்டோம்! இவனைக் கட்டிக்கொண்டு வாழ்க்கையில் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறதேயென்று கவலையடைந்து கணவனை ஆதரிக்காமல் அலட்சியம் செய்கிறவளும், அடக்கமில்லாமல், மானமில்லாமல், ஆபாசமான வார்த்தைகளால் கணவனை எதிர்த்துப் பேசுகிறவளும், அடுத்த வீடு அண்டை வீடுகளில் சமயம் நேரிடும் போதெல்லாம் சண்டை வளர்ப்பவளும், ஒருவர் சொல்லுவதை மற்றவரிடம் மிகைப்படுத்திக் கோள் சொல்லுபவளும், அடிக்கடி கணவனிடம் அடி வாங்குபவளுமான அற்ப புத்தியுடையவள் எவளோ அவளே காமாந்தகாரி எனப்படும்.

எனவே அன்பான மகளே! கணவனால் சூட்டப்பெற்ற நீ அணிந்திருக்கும் தாலியின் தத்துவத்தையும், மனைவி என்பதற்குறிய

உண்மையும், காதலி என்பதற்கான கருத்தையும் ஊன்றி விவேகித்து மனைவி (குடும்பத்தலைவி)க்குறிய குணத்தைக் கைக்கொண்டு கருத்தொருமித்து கணவனோடு காதலியாக வாழ்வாயாக.

பெண்கள் சமூகந்தான் பெரும்பாலும் பெண்களுக்கான பெருங் குணமில்லாது பிற்போக்கடைந்திருக்கின்றதென்றால் பெரும்பாலான புருஷர்கள் நிலையும் அப்படியே பிற்போக்கடைந்திருக்கிறது.

பொதுவாக மனிதர்கள் புருஷனென்றால் யார்? எப்படிப்பட்டவன் புருஷனாகமுடியும் என்ற உண்மை எதுவும் தெரியாது ஸ்திரீ இன்பம் அனுபவிப்பதற்கான ஆணுருவத்தையே புருஷனென்று எண்ணி வாழும் புது மனிதர்களாக இருக்கிறார்கள். புருஷனென்பது வெறும் ஆணுருவத்திற்கல்ல.

புருஷனென்றால் யார்?

புருஷனென்ற வார்த்தைக்கு தலைவன் என்று பொருள். தலைவனென்றால் யார்? தன்னிடத்திலிருக்கும் அறியாமைக்குறிய அதாவது மமதை, சோபம், பொறாமை, வஞ்சகம், ஏழைக் குறும்பு, பணத்திமிர்போன்ற தீய குணங்களை செயலடையவிடாது, தீய குணங்களை அடக்கி அடிமைப்படுத்தி தனக்குத்தானே தலைவனாக ஆனவனே புருஷனாவான். இப்படித் தனக்குத்தானே புருஷனாக ஆனவன் எவனோ அவன் தான் விவாகம் செய்துள்ள தனது மனைவிக்கும் தலைவ (புருஷ) னாகமுடியும்.

இப்படி புருஷனுக்குறிய புத்தி இல்லாமல், புருஷார்த்தத்தின் உண்மை விளங்காமல் புருஷ நெறியோடு மனைவியுடனிருந்து வாழத்தெரியாமல், மனைவி குடும்பத் தலைவியென்பதை உணராது மனைவியை அடிமையென்று அலட்சியமாகக் கருதி தீய குணங்களுக்கு அடிமைப்பட்டு தீய குணங்கள் ஏவுகின்றபடி செயலாற்றி சுக துக்கங்களென்ற இரட்டை வியாதிகளினால் மாறி மாறி தாக்கப்பட்டு அமைதி காணாது அலைமோதுகின்றவன் மனைவிக்குப் புருஷ

(தலைவ) னல்ல. ஆனால், அவன் சாதம் சமைத்து போடுவதற்காக வும், மற்ற வீட்டுவேலை செய்வதற்காகவும், சிற்றின்பம் அனுபவிப் பதற்காவும் மனைவியுடன் வாழும் காமவெறிக் கருவியான வெறும் ஆணுருவமேயாகும். எனவே புருஷனென்பதற்கான விபரம் உணராமல் புருஷ நெறியின்றி இருப்பதினாலே தான், பெண்ணை விவாகம் செய்துகொண்டவன் மனைவியுடன் காதலனாக வாழ்வ தில்லை. வாழவும் தெரிவதில்லை. காமுகனாகவே வாழ்கின்றான். மனைவியுடன் வாழ்கின்றவன் காதலென்றாலென்ன, காமமென்றா லென்ன என்ற விபரம் தெரியாது காமத்தையே காதலென்று கருதி விடுகின்றான். எனவே மனைவியோடு வாழ்கின்ற ஒருவன் காதலன் என்றால் யார்? காமுகனென்றால் யார்? என்ற விபரத்தை தெரிந்து கொள்ளவேண்டும். அப்பொழுதான் மனைவியுடன் காதலனாக வாழ்ந்து இல்லற வாழ்க்கையின் இனிமை காணமுடியும்.

காமுகனென்றால் யார்?

மனைவி தீய குணமுடையவளாயினும் சரி, எடுத்ததற்கெல் லாம் எதிர்த்து எதிர்த்துப் பேசும் இயல்புடையவளாயினும் சரி, குடும்பத்திலுள்ளவர்களிடமும், அக்கம் பக்கங்களிலுள்ளவர்களிட மும் வலிய சண்டை வளர்க்கும் வாயப்பட்டியாயினும் சரி, அதைப் பொருட்படுத்தாது மனைவியின் அங்க அழகிற்கும், ஆடையாபரண ஜோடனைகளுக்கும் மனதை பறிகொடுத்து காம இச்சைக்கு அடிமைப்பட்டு மனைவி நல்லது சொன்னாலும், கெட்டது சொன்னா லும் அதை தேவ வாக்காக எண்ணி மனைவியிடம் ஆசைவைத்து பெற்றோர்களை எதிர்ப்பவனும், ஆதரிக்காதவனும், பிற ஸ்திரீலோல னுமான பிற்போக்குடையவன் எவனோ அவன் காமுகனாகும்.

பெரிய யானையையும் ஒருவன், தான் சொல்லுகிறபடியெல் லாம் கேட்குப்படி அடக்கி ஆட்டிவைக்கிறான். அப்பேற்பட்ட யானைப் பாகனையும் கூட வீட்டிலுள்ள அவன் மனைவி தான் சொல்லுகிறபடியெல்லாம் கேட்டு அடங்கி நடக்குபடி ஆட்டி வைக்கின்றாள், காமுகனானவன் வெளியார்களுக்கு பெரிய

வீரனாகவோ, விவேகியாகவோ, அதிகாரியாகவோ தோன்றினாலும் வீட்டில் மனைவியிடம் அவன் நாய்க்குட்டியைப்போல் நடந்துக் கொள்ளும் நவீன மனிதனாகவே இருப்பான்.

காதலனென்றால் யார் ?

மனைவியின் அங்க அழகிற்கும், ஆடையாபரண ஜோடனைகளுக்கும் மனதை பறி கொடுக்காமல், காம இச்சையின் அடிப்படையில் மனைவியிடம் கட்டுண்டு கிடக்காமல், மனைவியின் அபிநயத்திற்கும், அறியாமைக்கும் கட்டுப்படாமல் கடமை தவராத மனைவியின் அன்பிற்குக் கட்டுப்பட்டு மனைவியுடன் வாழ்கின்றவனாகி கால மாற்றத்தால் மனைவி வியாதி வயப்பட்டு சரீரம் மெலிந்து, விகாரரூபியாய் எதற்கும் லாயக்கற்றவளாக ஆகிவிடும் சந்தர்ப்பத்தில் கூட மனைவியிடம் முன்பிருந்த பயன் கருதா அன்பு குறையாமல் மற்ற ஸ்திரீகளிடம் மனது வைக்காமல், மனைவிக்கு ஆவன செய்து ஆதரித்து காப்பாற்றுகிற கருணையுள்ளம் படைத்த உத்தமன் எவனோ அவனே காதலனாகும்.

எனவே அன்பான மகளே? காதலர்க்குரிய இத்தகைய தத்துவத்தை நிரூபித்துதான் நமது தமிழ்த்தாய் ஔவைபிராட்டியார் கூட

"காதலிருவரும் கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்." என்று

அருளுகின்றாள். மேலான இந்தக்காதலின் தத்துவம் தெரியாததினாலேயே பெரும்பாலான குடும்பங்களில் சதிபதிகள் நாயும், பூனையும் போன்று இன்பமற்று வாழுகின்றார்கள்.

கணவன் மனைவி இருவர்களும் இரு கண்கள் போல இருக்கவேண்டும்.

கண்கள் இரண்டாயிருந்தாலும் ஒரு கண் ஒரு வஸ்துவையும், மற்றொரு கண் வேறொரு வஸ்துவையும் பிரிந்து பார்ப்பதில்லை, எதையாவது பார்க்கவேண்டுமானால் இரு கண்களும் ஒன்று

சேர்ந்தே பார்க்கின்றது. இப்படியே கணவன் மனைவி இருவரா யிருந்தாலும் கண்கள்போல ஒன்று சேர்ந்தே வாழ்க்கை நடத்தப் பழகுதல்வேண்டும். கணவன் மனைவி இருவர்களும் கண்கள் போல் ஒன்றுசேர்ந்து ஒத்த மனத்தினராய் வாழ்க்கை நடத்துவது தான் காதல் வாழ்க்கையாகும். ஒத்த மனத்தினராயில்லாத கணவன் மனைவியர் வாழ்க்கையானது மிருக இச்சைக்காக நடத்தப்படும் மிலேச்ச வாழ்க்கையேயாகும். எனவே காதலர்களாய் வாழத் தெரியாத சதிபதிகள் சம்சாரமென்பதற்குறிய உண்மைப் பொருளை தெரிந்துகொள்ளவேண்டும்; அப்பொழுதுதான் சதிபதிகள் காதலர் களாய் சம்சார வாழ்க்கை நடத்துவதற்கு தகுதி வாய்ந்தவர்களாக முடியும்.

சம்சாரமென்றாலென்ன? சம்சாரியென்பது யார்?

கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவிக்கு சம்சாரமென்று பெயரில்லை. சம்சார சுகமென்றால் சிற்றின்ப சுகமென்று அர்த்த மில்லை. சம்சாரமென்றால் மனைவியை குறித்து சொல்வது என்று பெரும்பான்மையோர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். சம்சார மென்பது மனைவியென்றால் சம்சார வாழ்க்கையென்பது மனைவி வாழ்க்கையென்றல்லவோ தனித்து அர்த்தமாகின்றது. எனவே, சம்சாரமென்றால் மனைவியென்றும், சம்சார சுகமென்றால் சிற்றின்ப சுகமென்றும் அர்த்தமில்லை; சம்சாரமென்ற மொழி வடமொழி யாகும்; இம்மொழி சம்—சாரம்—என்று பொருள்படும் இரு மொழியாகும். சம் என்றால் சுகமென்றும் சாரமென்றால் மாறுத லடையாது (நிலைத்திருப்பதுயென்றும்) அதாவது கணவன் மனைவி இருவர்களும் மாறுபடாத மனத்தினராய் இல்லற வாழ்க்கையில் நிலைத்த சுகத்தை அனுபவிப்பது என்பது அர்த்தமாகும். இப்படி சம்சார வாழ்க்கை நடத்தும் சதிபதிகளுக்குத்தான் சம்சாரியென்று சொல்வது. இத்தகைய சம்சார வாழ்க்கையின் தத்துவம் தெரிந்து சம்சார வாழ்க்கையில் சாராதவர்கள் கணவன் மனைவியென்ற பெயரில் குடும்பம் நடத்தும் வயது வந்த விளையாட்டுப் பிள்ளைகளே யாகும். எனவே அன்பான மகளே! சம்சாரமென்பதைப் பற்றி

183266

செய்துள்ள இந்த விளக்கத்தை விவேகித்து பத்தினித் தன்மை பெற்று சம்சார வாழ்க்கையில் சார்வாயாக.

பத்தினியென்பவள் யார்?

வாழ்க்கைப்பட்ட ஒரே கணவனிடத்திலிருந்து விபசாரத் தனமின்றி குடும்பம் செய்கின்றவள் தான் பத்தினியென்றும் அனேகர் நினைத்துக்கொண்டிருக்கிறுர்கள். வாழ்க்கைப்பட்ட ஒரே கணவனிடத்திலிருந்து குடும்பம் செய்கின்ற பெண்ணுக்கு பத்தினி யென்று பெயரில்லை. இல்லற வாழ்வு நடத்துவதற்கு வேண்டிய பத்து விதமான நற்குணங்களோடு கூடியவளுக்குத்தான் பத்தினி யென்று பெயர்.

ஆகையால் மகளே! இல்லற வாழ்க்கையில் நீ கணவனுடன் நடந்துகொள்ளவேண்டி என்? பொதுவாக பெண்கள் கணவ னிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய பத்தினிக்குறிய பத்து வித மான குணங்களை விளக்கமாகக் கூறுகின்றேன் விவேகமாக கவனிப்பாயாக.

1. முதலாவது குணம்; கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவி யானவள் பொறுமையில் ஏசுநாதரைப்போன்றும், காந்தியடிகளைப் போன்றும் இருக்கவேண்டும். ஏசுநாதரை சிலுவையில் வைத்து யூதர்கள் சித்திரவதை செய்யும்போதுகூட தன்னை சித்திரவதை செய்கின்றவர்களின் செயலைப்பார்த்து மனமிரங்கியவராய் கடவுளை நோக்கி பிதாவே இவர்கள் செய்வது பாபமென்று உணராமல் செய்கிறுர்கள். உணராமல் இவர்கள் செய்கின்றபாபத்தை மன்னிப் பீராக! என்று கடவுளை பிரார்த்தனை செய்துகொண்டு பொறுமை வழுவாமல் உயிர் துறந்தார். காந்தியடிகளை தென்னுப்பிரிக்காவில் மிலேச்சனொருவன் அடித்து பல்லையுடைத்துவிட்டான், அதை மற் றொருவன் பார்த்து கோபங்கொண்டு; அடித்தவனை தன் கைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவதற்கு எத்தனித்தான்; இதையறிந்த காந்தியடிகள் விரைந்து அந்த மனிதனிடம் சென்று அவனைக் கொன்றுவிடாதே! அறியாத்தனமாக என்னை அடித்துவிட்டான்;

போகட்டும் அவனை விட்டுவிடு யென்று பொருமையோடு கூறி தன்னை அடித்வனிடம் பொருமை காட்டினார்; பொருமை காட்டிய தால்; ஏசுநாதரையும், காந்தியடிகளையும் வணக்கத்திற்குறிய தெய் வாம்சங்களாக கொண்டாடுகிறார்கள் எனவே! பெண்கள் முதலாவ தாக பொருமையாக இருக்க பழகிக்கொள்ளவேண்டும். புருஷன் அடித்தால் அடிக்காதீர்கள், உங்கள் கைவலிக்கும் என்று சொல்லக் கூடிய அவ்வளவு பொருமையுடையவளாக ஒரு பெண் இருந்தாளே யானால் ராட்சத குணம் படைத்த கணவனாகயிருந்தாலும்; மனைவி சாத்வீக குணம் படைத்த சத் புருஷனாக ஆக்கிவிடலாம்.

2. இரண்டாவது குணம்; வீட்டுவேலை செய்வதில் மனைவி யானவள் தாதியைப்போல் உழைத்தல்வேண்டும். வீட்டுவேலை செய்வதற்கு ஒரு வேலைக்காரியை அமர்த்தினால்; எஜமானும், எஜமானியும் காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருப்பதற்கு முன்பே வந்து பத்து பாத்திரங்களை கழுவி, வீடு வாசலை பெருக்கி சுத்தம் செய்து, கோலமிட்டு, குடும்பத்திற்கு தேவையான தண்ணீர் கொண்டுவந்து நிரப்பி தன் கடமையை எப்படி சுத்தமாய் செய்து முடித்துவிடுவாளோ; அப்படியே புருஷனாகிய தனது எஜமான் எழுந்திருப்பதற்கு முன்னதாகவே காலையில் எழுந்து தன் வீட்டு வேலைகளை சுத்தமாய் செய்து முடிக்கக்கூடிய திறமைசாலி யாக மனைவியிருக்கவேண்டும்.

3. மூன்றாவது குணம்; கணவன் கவலையினால் மனத்தளர்ச்சி யடையும்பொழுது; கணவனுக்கு தேர்தல் சொல்லி சமாதானமும், சாந்தியும் உண்டாகும் வகையில் யோசனை சொல்வதில் மந்திரியைப் போன்ற வளாக இருக்கவேண்டும். மேலும் கணவனுக்கு கோபம் உண்டாகும்படி நடந்துகொள்ளாமல் சமயங்களில் கணவன்கோபக் குறியோடு வெளியிலிருந்து வரும்போது குறிப்பறிந்து நடந்து கொள்ளக்கூடிய யூகமுடையவளாக மனைவியிருக்கவேண்டும்.

4. நான்காவது குணம்; வாழ்விலும், தாழ்விலும் ஒரே நிதான மாக கணவனோடு ஒத்துழைக்கக்கூடிய உண்மையுடையவளாக

மனைவி இருக்கவேண்டும். ராமபிரான் அயோத்தியிலிருந்து கானகம் செல்லும்போது; சீதை நானும் வருகிறேனென்று கணவனோடு காட்டிற்குபோக பின்தொடர்ந்தாள் அதற்கு ராமபிரான்; சீதையை நோக்கி பெண்ணே! நீ பூமியில் அதிகமாக நடந்து பழக்கமில்லாதவள், மேலும் நீயொரு சக்ரவர்த்தியின் குமாரி, காட்டில் கற்களிலும் முட்களிலும் நடந்து செல்லவேண்டும். உன்னால் முடியாது நீ அயோத்தியிலேயே இரு நான் கானகம் செல்லுகிறேன் என்றார். அதற்கு சீதாதேவி; பதியே! நான் நடந்து பழக்கமில்லாதவளானாலும், சக்ரவர்த்தி மகளானாலும் சரி, நான் எப்பொழுதும் அயோத்தியிலேயே இருக்க விரும்புகிறேன். அயோத்தியை விட்டு அரை விநாடிகூட அப்புறம் போகமாட்டேன் என்றாள். அதற்கு ராமபிரான் அப்படியானால் ரொம்ப நல்லது. நீ அயோத்தியிலேயே சௌக்கியமாய் இரு, என்று சீதாதேவியை விட்டுப்பிரிந்து கானகம் செல்லப் புறப்பட்டார்; உடனே சீதாதேவி ராமருடன் கானகம் செல்லப்பின் தொடர்ந்தாள். இதையறிந்த ராமபிரான் சீதையை நோக்கி, சீதா! நீ தான் அயோத்தியிலேயே இருப்பதாகச் சொன்னையே; ஏன் இப்பொழுது என்னுடன் கானகத்திற்கு பின் தொடருகிறாய் என்று கேட்டார். அதற்கு சீதாதேவி ராமபிரானை நோக்கி; பதியே! என் கணவராகிய நீங்கள் எந்த இடத்தில் இருக்கிறீர்களோ; அந்த இடந்தான் எனக்கு அயோத்தியாகும். நீங்கள் வேண்டுமானால் இந்த பட்டணத்தையும், ராஜமாளிகையையும், அயோத்தி என்று நினைத்துக்கொண்டிருக்கலாம். எனக்கோ நீங்கள் எங்கெல்லாம் இருக்கின்றீர்களோ அங்கெல்லாம் நான் அயோத்தியை காண்கிறேன். நீங்கள் எந்த இடத்தில் இருக்கின்றீர்களோ அந்த இடந்தான் எனக்கு அயோத்தியாகும். அதனால் தான் நான் அயோத்தியைவிட்டு அரை விநாடிகூட அப்புறம் போகமாட்டேன் என்று கூறினேன். கற்புடைய பெண்களுக்கு கணவன் அனுபவிக்கும் சுகபோகங்களிரண்டிலும் சரிபாகம் உண்டல்லவா? ஆகையினால் தான் நான் உங்களுடன் காட்டிற்கு வருகிறேன் என்று கூறி ராமபிரானை இணங்கச்செய்து சீதாதேவியும் கானகம் சென்றாள். எனவே கணவனுக்குள்ள சுகம், தன் சுகம் என்று

நினைத்து, அனுபவத்தில் கணவனுடன் வாழ்வு, தாழ்விரண்டிலும் அன்பு குன்ருமல் மனைவியானவள் கணவனுடன் ஒற்றுழைக்கக் கூடிய உத்தமியாக இருக்கவேண்டும்.

5. (ஐந்தாவதாக) மனைவியானவள் கணவனைத் தவிர மற்ற ஆண்களை சகோதரர்களாக கருதும் சத்தியவதியாக இருக்க வேண்டும்.

6. (ஆருவதாக) மனதில் எவ்வளவு கவலையும் துக்கமும் இருந்தாலும், மனைவி கணவனிடத்தில் மலர்ந்த முகமுடையவளாகவும், இதமான இணக்கமான வார்த்தை பேசுபவளாகவும் இருக்க வேண்டும்.

7. (ஏழாவதாக) கணவனுக்கு ஆகாரம் கொடுத்து போஷிப்பதில் தாயைப்போன்ற உள்ளமுடையவளாக மனைவி இருக்க வேண்டும். அனேக பெண்கள் கணவனுக்கு சோறு போடும் போது கடன் தொல்லையைப் பற்றியும், சம்பாத்தியம் சரிவர இல்லாததைப்பற்றியும், அடுத்த வீட்டுப் பெண்ணுடன் சண்டை செய்ததைப்பற்றியும் இன்னும் கணவன் கவலையும், கோபமும் அடையக் கூடிய வகையில் ஏதேதோ சொல்லி கணவனை அமைதியாய் சாப்பிட முடியாதபடி செய்யும் அறிவுகெட்ட பெண்களாக இருக்கிருர்கள். எனவே எவ்வளவு கடன் தொல்லையிருந்தாலும் சண்டைச் சச்சரவு இருந்தாலும், எவ்வளவு துன்பமிருந்தாலும், கணவன் உணவருந்தும்போது அவைகளைக் காட்டிக்கொள்ளாது மலர்ந்த முகத்தோடு இனிய வார்த்தைகளைப் பேசி கணவனுக்கு ஆகாரம் படைக்கும் ஆற்றல் உள்ளவளாக மனைவி இருக்க வேண்டும்.

8. (எட்டாவதாக) படுக்கையறையில் கணவனிடம் மனைவி தாசியைப்போல் நடந்துகொள்ளும் சல்லாபமுடையவளாக இருக்க வேண்டும். அனேக குடும்பங்களில் பெண்கள் புருஷனிடம் படுக்கையறையில் சந்தோஷமாய் நடந்துகொள்ளத் தெரியாமல்

படுக்கையறையில் இருக்கும்போதுதான் நகைசெய்து போடவில்லை நல்ல சேலை எடுத்துக்கொடுக்கவில்லை என்பதைப்பற்றியும், மாமி, நாத்தி சண்டையைப்பற்றியும் முறையிடுவதும் மனதில் ஏதாவது கவலையிருந்தால் புருஷனிடம் சொல்லி அழுவதும், கோபிப்பதுமான குணங்கெட்டவர்களாக இருக்கிறார்கள். சில பெண்கள் படுக்கையறையில் வெறிநாயைப்போன்று சீறிவிழும் விவேகமில்லாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் தான் சில நல்ல மனிதர்கள்கூட மனைவி அழகுடையவளாகயிருந்தாலும் அதை லட்சியம் செய்யாது தாசிகளை வைத்துக்கொண்டு மனைவியை கவனியாமலிருந்துவிடுகிறார்கள். ஆகையால் மனதில் என்ன கவலையிருந்தாலும் மன திருப்தியாய் அணிந்துகொள்ள நல்ல ஆடையாபரணங்கள் இல்லாவிட்டாலும் மாமி நாத்தி சண்டையிருந்தாலும், குடும்ப தொந்தரவு இருந்தாலும் அவைகளையெல்லாம் காண்பித்துக்கொள்ளாது படுக்கையறையில் கணவனுடன் சந்தோஷமாய் நடந்துகொள்ளும் சற்குணவதியாக மனைவியிருக்கவேண்டும்.

9. (ஒன்பதாவதாக) இரவில் கணவன் தூங்கிய பிறகு தூங்குகிறவளாகவும் காலையில் கணவன் விழிப்பதற்கு முன் விழித்துக்கொண்டு கணவன் பாதங்களை தொட்டு கும்பிட்டு காலைக்கடனை முடித்துவிட்டு வேலை செய்ய விழைபவளாக மனைவியிருக்கவேண்டும்.

10. (பத்தாவதாக) கணவனை தெய்வமாகவும் கணவன் வசிக்கும் இடத்தை கோவிலாவுகம் கணவனுக்கு செய்யக்கூடிய சேவைகளை அர்ச்சனை ஆராதனையாகவும் கொண்டு அகமகிழக் கூடியவளாக மனைவியிருக்கவேண்டும்.

கணவனைத் தவிர பிற புருஷர்களை கண்ணெடுத்தும் பாராதவளாக ஒரு பெண் இருந்தாளேயானாலும், கொடுமை, கோபம், எதிர்த்துப் பேசுவது போன்ற துற்குணமுள்ள தூர்த்தையாக இருந்தாளேயானால் அவளுக்கு பதிவிரதையென்றோ, பத்தினியென்றோ பெயரில்லை இத்கைய பெண்களுக்கு வீட்டுச் சனியன் யென்று பெயர்.

கற்பென்றாலென்ன ?

பிற புருஷனைக்கண்டு ஒரு பெண் உள்ளத்தில் இச்சை கொள்வாளேயானாலும் அவள் கற்பிழந்தவளேயாகும்.

மேற்கூறிய பத்துவிதமான உத்தம குணங்களோடு கணவனிடத்திலிருந்து கடமை தவறாமல், கற்பு வழுவாமல் வாழ்க்கை நடத்துகின்றவர்களுக்குத்தான் பதிவிரதையென்றும் பத்தினியென்றும் பெயர்.

கணவனிடத்தில் அனுஷ்டிக்கவேண்டிய மேற்கண்ட பத்துவிதமான விதிமுறைகளை அன்றாட வாழ்க்கையில் அனுஷ்டித்துக் கொண்டு வருகிற பெண்மணி எவளோ அவள்தான் கணவனால் சூட்டப்பெற்ற தாலியை கழுத்திலணிந்துகொள்ள தகுதிவாய்ந்த உண்மை மனைவியாகும். மனைவிக்குரிய இத்தகைய நெறிமுறைகளை அன்றாட வாழ்க்கையில் அனுஷ்டிக்காத பெண்களெல்லாம் பெயரளவில் மனைவியாக வாழும் காம உபாதைக் கருவிகளேயாகும்.

எனவே அன்பான மகளே! போதிய அளவு கல்வி அறிவு உள்ள நீ புருஷனிடத்திலிருந்து இல்லற வாழ்க்கை நடத்துவது எப்படி என்ற இந்த விளக்கத்தை ஊன்றிப் படித்து, ஊக்கமாக சிந்தித்து, நல்ல குணசீலராக உள்ள உன் கணவருடன் சூட்சம அர்த்தநாரீஸ்வரர்போல் ஒன்று சேர்ந்து வெற்றிகரமாக வாழ்க்கையை நடத்தி, இல்லறம் நடத்துவது எப்படி? யென்ற உண்மை தெரியாத பெருமபாலான குடும்பப் பெண்களுக்கு உன் வாழ்க்கை ஒரு படிப்பினையாக இருப்பதற்குரிய இயல்பில், மகிழ்வு ததும்ப நன்மக்களைப்பெற்று ஸ்திரம் ஜீவியாக வாழ்வாயாக.

இங்ஙனம்,

உன் அன்பு மறவாத தந்தை,

கிணகர் சுவாமிகள்.

4—8—1956.

பிர்மமே சத்யம்.

அறிவு விளக்க வெளியீடு.

தமிழ்நாட்டுத் தத்துவஞானி

ஸ்ரீ குருகிணகர் சுவாமிகள்

அருளிய

★ அனுபவப் பொன்மொழிகள். ★

1. கண்ணுக்குத் தெரிவது கடவுளல்ல. கண் எதைக்கொண்டு அறிகிறதோ அதுவே கடவுள்.

2. கோபமென்பது கொடிய விஷப்பாம்பைப் போன்றது. அது அஞ்ஞானம் என்ற புற்றில் ஒளிந்து கொண்டிருக்கிறது. சமயத்தில் அது மனிதன் வாழ்க்கையைப் பாழ்படுத்தி விடுகிறது. சில சமயத்தில் மனிதனைத் தீண்டி மாய்த்தும் விடுகிறது. ஆகையால் அதை ஞானமென்ற கூட்டில் அடைத்து உன் பார்வையில் வைத்துக்கொள்.

3. பொறுமை என்பது எருமையைப்போன்றதல்ல. அது தர்ம யுத்தம் செய்யும் போர்வீரனின் கரத்தில் இருக்கும் வாள் முனையைப்போன்றதாகும்.

4. மனைவியின் அபிமானத்திற்குக் கட்டுப்படு. ஆனால் அவளின் அபிப்ராயத்திற்குக் கட்டுப்படாதே.

5. பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டதினால் மாத்திரம் ஒருவன் கணவனாகிவிடமுடியாது. கணவனுக்குள்ள நெறிமுறை தவறாமல் மனைவியின் அந்தரங்கம் தெரிந்து வாழ்க்கை நடத்த வழி கண்டவனே கணவன் என்ற பெயருக்கு உரியவனாகிறான்.

6. கணவனிடம் நீதி மீறி எதிர்த்துப் பேசுகிற மனைவியானவள் பெண்ணல்ல. அவள் ஒரு பெண் வேஷம் தரித்த பேய்.

7. கணவனுடைய கருத்திற்கு மாறாக நடப்பவள் மனைவியல்ல. அவள் ஒரு பெண் கரடியேயாகும்.

8. பெண்ணே! குலுக்கி மினுக்குவதற்கான ஆடை ஆபரணங்களால் உன்னை அதிகமாக அலங்கரித்துக்கொள்ளாதே. அது பெரும்பாலும் பிற புருஷர்கள் பார்க்கும் காமப் பார்வைக்கு உன்னை கருவியாக ஆக்கிவிடும்.

9. பெண்ணே! ஏழைக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு, பணக்காரன் மனைவியைப்போல் படாடோபமாக வாழப் பிரியப்படாதே. அது அமைதியைக்கெடுத்து அவதியைக் கொடுக்கும்.

10. உனக்குள்ள இயற்கை அழகைக் கண்டு நீயே இருமாப் படையாதே. அது உள்ள புத்தியைக் கெடுத்து, கள்ள புத்தியைக் கொடுத்துவிடும்.

11. செயற்கை அழகில் உன்னை அதிகமாக சிங்காரித்துக் கொள்ளாதே. அது உன் இயற்கை புத்தியின் இரகசியத்தை வெளிப் படுத்திவிடும்.

12. பெண்ணே! கணவனின் தீய செயலுக்கு துணையாயிராதே. அவன் தூய செயலுக்கு துணையாயிரு.

13. பொழுது போக்குவதற்காக உள்ள புத்தகங்களைப் படிக்காதே. அது நல்ல புத்தியைப் போக்கி, நாச புத்தியை உண்டாக்கிவிடும்.

14. புத்தி தெளிவடைவதற்காக உள்ள புத்தகங்களைப்படி. அது தீய புத்தியைப் போக்கி, தூய புத்தியை உண்டாக்கும்.

15. பெண்ணே! புருஷனுக்கு, அவன் காம வெறியைத் தணித்து கொள்வதற்காக உள்ள வெறும் கருவியாக மாத்திரம் இருந்து விடாதே. பெண்ணுக்குரிய பெருங்குணங்களைப் பெற்று, கணவன் குறிப்பறிந்து வாழ்க்கை நடத்த கணவனுக்கு உற்ற துணைவியாக இரு.

16. இல்லறத்திலுள்ள, தன்னை அறிந்த உண்மை ஞானியாகிய ஒருவன், உலக சுகங்கள் அனைத்தையும் உலகினரைவிட அதிகமாக

அனுபவித்துக்கொள்கிறுன். ஆனுல், துக்கங்கள் அவனை தாக்க வரும்பொழுது துக்கங்கள் தாக்காதவாறு, துக்கங்களை அவன் சுலபமாக ஏமாற்றிவிடுகிறுன்.

17. தன்னை உணராத (அதாவது உண்மை ஞானமறியாத) சாதாரண உலகினனுன மனிதன், அவன் அனுபவிக்கும் சுகங்களில் சொக்கிவிடுகிறுன். ஆனுல் அவன் துக்கங்களால் தாக்கப்படும் பொழுது, துக்கங்களிலிருந்து மீளமுடியாது, சித்திரவதைக்கொப்பான துன்பத்தை அடைகிறுன்.

18. மனிதனே! வறுமை வரும்போது, வாழ்க்கையில் படாத கஷ்டங்கள் பல அனுபவித்து, இதற்கு முன் சுகமாக வாழ்ந்ததை நினைத்து மனமுருகி வறுமையில் இருந்து மீள வகை தெரியாமல் வாடி வருந்துகின்றுயே! அதனுல் என்ன பயன்? வறுமையைக் கண்டு பயந்தால் வறுமையைக் கண்டு வருந்தினுல் வறுமை நீங்கி விடுமா? வறுமையைக் கண்டு அஞ்சாதே. வறுமை வந்தபோது வறுமையிலிருந்து மீளவேண்டுமென்ற முயற்சியின் அடிப்படையில் வறுமையைஎதிர்த்து, வறுமையிலும் வறுமையாய் வாழ்வதற்கு வாழ்க்கையில் நீ உன்னை தயார் செய்துகொள். அப்பொழுது வறுமை உன்னை என்ன செய்யமுடியும்.

19. பன்றிக்குட்டியும் அதன் பருவத்தில் பத்து பணம் பெறும் அதுபோல் அவலெட்சணமான பெண்களும் பருவ காலத்தில் அழகுடையவர்களாகத் தோன்றுவார்கள். ஆகையால் பொதுவாக பெண்களின் அழகைக்கண்டு மோகிக்காதே—மயங்காதே. பெண்களின் அழகானது ஆகாயத்தில் தோன்றி மறையும் வானவில் போன்றது. மேலும், "அருப்பு மலர்ந்து வாடுதல் போலாம் விரும்பும் மங்கையர் விம்மிய அழகு".

20. மனைவியின் அழகிற்குக் கட்டுப்பட்டு மனைவியிடம் மயங்குகின்ற புருஷன், புருஷனல்ல. அவன் மனைவிக்கு மனைவியாய், அடிமைப்பட்ட ஆண்பிள்ளை உருவத்திலிருக்கும் பெண்ணேயாகும்.

21. புருஷ பக்தியும், குடும்பப் பொறுப்பும் உடைய புத்திசாலிப் பெண்கள் சினிமாக்காரிகளைப்போல் ஜோடித்துக்கொள்ளும் ஆடையாபரண அலங்காரங்களையெல்லாம் கால் தூசிக்கு சமானமாக கருதுவார்கள்.

22. ஆடையாபரண மோகமுடைய அலங்கார மேனி மினுக்கிகளான பெண்கள் குடும்ப அனுபவம் பெருவதற்கு லாயக்கற்ற வீட்டு வேஷக்காரிகளேயாகும்.

23. கண்கள் பார்வையை நம்பி மோசம் போகாதே அது உன்னை கருத்தற்ற கபோதியாக்கிவிடும்.

24. மனிதனுக்கேற்படும் செல்வச்செருக்கு ஒரு சிறு கிறுக்கேயாகும்.

25. அங்க அழகிற்காக மனைவியை நேசிக்கின்ற கணவனும், அங்க அழகு ஆடம்பரத்திற்காக கணவனை நேசிக்கின்ற மனைவியும் கல்யாண உண்மையறியாத காமுகர்களேயாகும்.

26. புத்தகம் படித்த புது நாகரீக நங்கையைவிட அடக்க ஒடுக்கமுள்ள படிக்கத்தெரியாத பாமரப்பெண் மிக மிக மேலானவளேயாகும்.

27. பிற புருஷனுடைய ஸ்பரிசத்தை நெருப்பின் ஸ்பரிசத்தைப் போன்று நினைக்கின்ற பெண் பதிவிரதா தர்மத்தின் பண்பறிந்தவளாகும்.

28. அழகான பெண் கண்களுக்கு காட்சியளிக்கின்ருள். குணமான பெண் வாழ்க்கையில் சந்தோஷமும், சாந்தியும் தருகின்ருள்.

29. சிற்றின்பம் அனுபவிப்பதற்காகவே கல்யாணம் செய்துக் கொள்ளப்படுகிறது என்ற முடிவில் விவாகம் செய்துகொள்ளும் ஸ்திரீ புருஷர்கள் மனித உருவிலான மிருக இனங்களேயாகும்.

30. சிற்றின்பமென்பது பிரஜா உற்பத்திக்கான ஒரு செய்கை மாத்திரமே.

31. காம உபாதையிலுள்ள கடுகளவு இன்பமே சிற்றின்ப மெனப்படும்.

32. காம உபாதையில் கடுகளவு இன்பத்தை கடவுள் சிருஷ்டித்து இராவிட்டால் ஆண், பெண் புணர்ச்சியும், மக்கள் பேறும் இருக்காது.

33. கடுகளவு இன்பம் கலக்காத வெறும் காம உபாதையை மாத்திரம் பரம்பொருள் சிருஷ்டித்திருக்குமேயாகில் துன்பத்திற்காக எந்த ஆணும், பெண்ணும் புணர்ச்சியிலீடுபடாது, காம உபாதையில் கடுகளவு இன்பம் கலந்திருந்தால்தான் இன்பத்தை அனுபவிப்பதற்காக ஜீவர்கள் தூண்டப்பட்டு ஆண், பெண் புணர்ச்சியிலீடுபடும். அதனல் பிரஜா உற்பத்தி ஏற்பட்டு ஜீவ இனங்கள் தோன்றி உலகம் பரிணமிக்கும். இதனுலேயேதான் இறற்கை சக்தியாகிய பரம்பொருள் ஜடா தீதமான தனது பேரின்பத்தின் பிரதிபலிப்பை காம உபாதையில் கடுகளவு பிரவேசிக்கச் செய்துள்ளது.

34. இந்த ரகசியத்தை அனுபவப் பூர்வமாக ஆராய்ந்து காம உபாதையில் கலந்துள்ள சிற்றின்பமென்பது பிரஜா உற்பத்திக்கான ஒரு செய்கை மாத்திரமேயென்ற லட்சியத்தை உணர்ந்து விவாகம் செய்துகொண்ட தம்பதிகளே கல்யாண உண்மை தெரிந்த காதல் தம்பதிகளாகும்.

35. பெரும்பாலும் தற்காலப் பெண்கள் தன்மானத்தை காப்பாற்றிக்கொள்வதற்காக ஆடைகளை உடுத்திக்கொள்வதில்லை. பிறர் பார்வையை கவருவதற்கான வேடிக்கைக்குறிய ஆடைகளையே அணிந்து கொள்ளுகிருர்கள்.

தமிழ்நாட்டுத் தத்துவ ஞானி
ஸ்ரீ குருகிணகர் சுவாமிகள்
அருளிய

பரமஹம்சன் தாலாட்டு.

ராகம் :— நீலாம்பரி]

ஆராரோ ஆரிரரோ — என் கண்ணே
ஆரிரரோ ஆராரோ.

1. சாந்தம் தவழ சன்மார்க்கம் மேலோங்க
வேந்தர் மகிழவந்த வித்தகமே கண்வளராய் (ஆரா)

2. எங்கும் நிறைந்துலகம் எல்லாமா யல்லதுமாய்
துங்கம் பெறஇலங்கும் சுயுஞ்சோதி கண்வளராய் (ஆரா)

3. உள்ளம் மகிழநல்ல உருவாயமைந் தெனக்கு
பிள்ளை யெனப்பிறந்த பேறரிவே கண்வளராய் (ஆரா)

4. தாயும் தகப்பன்பந்து தாரம் முதலியன
மாயை யெனவிளக்கும் மறையமுதே கண்வளராய் (ஆரா)

5. தாவரமும் ஜங்கமமும் ஜகஜீவ தோற்றமெல்லாம்
மேவஒன்ருய் வியாபித்த மேம்பொருளே கண்வளராய் (ஆரா)

6. தாயாகித் தந்தையுமாய் தனையன் உருவமுமாய்
நீயாகி யுள்ளபர நிராமயமே கண்வளராய் (ஆரா)

7. சாரமில்லா சம்சார ஜகவாழ்வில் எங்கள் — மன
பாரம் குறையவந்த பரமஹம்சா கண்வளராய் (ஆரா)

8. சிவனும் உமயவளும் சேர்முருகன் விநயகனும்
அவனும் இவனும் எல்லாம் ஆனவனே கண்வளராய் (ஆரா)

9. நினைவு இல்லாமல் தேகநிகட்சிக ளத்தனையும்
துணையாய் நிகழ்த்துகின்ற தூயவனே கண்வளராய் (ஆரா)

10. அணுவுள் அணுவாகி ஆகாயமும் கடந்து
நினைவுள் நினைவறியா நிற்பவனே கண்வளராய் (ஆரா)

11. மோக உலகசுகம் முழுதும் முடிவிலொரு
சோகம் எனஉணர்த்தும் துரையே நீ கண்வளராய் (ஆரா)

12. அண்டாண்ட கோடியெலாம் அணுபோன்று தன்னிடத்தில்
உண்டாக்கியே ஒடுக்கும் ஒருபொருளே கண்வளராய் (ஆரா)

13. சாகும் உடல்களிலே சாகாமல் நித்தியமாய்
ஏகம் பரம்பொருளாய் இருப்பவனே கண்வளராய் (ஆரா)

14. ஜாதி மதப்பிடிப்பில் சார்ந்தோர் அறியவொண்ணு
போத பழம்பொருளாம் பூரணனே கண்வளராய் (ஆரா)

15. கர்ப்பா சயத்தில் கருவை உருவாக்கி
தற்கார்த்து சிருஷ்டிசெய்யும் சத்பொருளே கண்வளராய் (ஆ)

16. கர்ப்பா சயமின்றி கருவின்றி ஜீவர்களை
உற்பத்தி செய்கின்ற உயிர்க்குயிரே கண்வளராய் (ஆரா)

17. வித்தில் விருட்சம் விரிவாய் உருவடைய
வித்துக்குள் வித்தாய் இருப்பவனே கண்வளாய் (ஆரா)

18. வித்தேயில்லாத விருட்சம் பல தோன்ற
வைத்த பூதாதீத வைதீகா கண்வளராய் (ஆரா)

19. யோகாதி வல்லுணர்கள் உணர்தற்கு எட்டாத
சாகாச் சிரஞ்சீவி சத்தியமே கண்வளராய் (ஆரா)

20. கர்த்தன் உனைப்பலதாய் கற்பித்து போற்றுகின்ற
பக்தர் அறியவொண்ணு பரமாத்மா கண்வளராய் (ஆரா)

21. கற்பிதமாய் பக்தர்குழாம் கருதுதற்கு தக்கபடி
அற்புதமாய் காட்சிதரும் அருளுருவே கண்வளராய் (ஆரா)

22. கடவுளே இல்லையென்று கருதுகின்ற நாஸ்திகரின்
உடலில் ஒளிர்உயிருள் உள்ளவனே கண்வளராய் (ஆரா)

23. நான்யார் என்றுஉணரும் நாட்டமுள்ள நல்லவரில்
தான்தோன்றித் தம்பிரானுல் சமைந்தவனே கண்வளராய் (ஆ)

24. ஆணுகி பெண்ணுகி அலியாய் அலியுமல்லா
தாணுகி நின்றபர தற்பரனே கண்வளராய் (ஆரா)

25. துணையாய் சர்வஜீவருள் துலங்குகின்ற தெய்வமய
கிணகர் சுவாமிகளெனும் கிரகஸ்தனே கண்வளராய் (ஆரா)

சுபம்.

183266

பிர்மமே சத்தியம்.

தமிழ் நாட்டுத் தத்துவ ஞானி

ஸ்ரீ குரு கிணகர் சுவாமிகள்

அருளிய நூற்கள்.

மனேசாட்சி அல்லது அந்தராத்மா.

[இரண்டாவது பதிப்பு].

மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவர்களும் தங்கள் தங்களிடமிலங்கும் பொது தெய்வமான மனேசாட்சியாகிய அந்தராத்மாவின் மகிமைமிகுந்த ரகசியத்தை அவரவர்கள் அனுபவத்தில் புரிந்துகொள்ளும் வகையில் எளிய நடையில் விளக்கம் செய்து எழுதப்பட்டுள்ளது. கடவுள் இல்லையென்று கூறும் நாஸ்திகர்களும் கூட வெட்கி தலை குனியும் வகையில் ஆராச்சி பூர்வமாக தெய்வ உண்மையை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் தெய்வ உண்மையை தெரிவதால் மனிதன் அடையும் பயனென்ன என்பதையும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது, பாக்கெட் சைஸ் புஸ்தகம்.

[விலை அணா 4.

திருக்குறள் கடவுள் வாழ்த்து
லட்சியார்த்த விளக்கம்.

திருக்குறள் கடவுள் வாழ்த்திற்கு இதுவரை யாராலும் விளக்கம் செய்திராத அளவில் பார்ப்பவர்கள் அதிசயிக்கும் அளவில் ஆராச்சி அனுபவபூர்வமாக உரை செய்யப்பட்டுள்ளது.

கடவுள் விஷயமாக புத்திக்கு புலப்படாத அனேக உண்மைகளை படித்த மாத்திரத்தில் பளீர் பளீரென விளக்கி தெளிவையூட்டி புனித நிலையில் மனிதவாழ்வை புதுப்பிக்கக் புத்திக்கு கூடிய ஞானக் களஞ்சியமான நூல்.

சுவாமிகளின் திருஉருவப்படத்துடன் கூடிய 50-பக்கம் கொண்ட புஸ்தகம்.

[விலை அணா 6.

கிடைக்குமிடங்கள் :

காரியதரிசி,
பிர்ம வித்தியாபீடம், குளுந்தாகுளம் தென்கரை,
திருவாரூர். (தஞ்சை ஜில்லா).

சு. சி. அருணாசலம்,
வெற்றிலை பாக்குக்கடை, பஸ் ஸ்டாண்டு,
அருப்புக்கோட்டை, (ராமனாதபுரம் ஜில்லா).

நீ யார் ?

என்ற தன்னையுணரும் தத்துவ நூல். [விலை அணா. 2.]